# சுற்றுலாவியல்

18K5ECELEC1

## பொருளடக்கம்

சுற்றுலாவியல் ஓர் அறிமுகம்

சுற்றுலாவின் வகைகள்

பன்னாட்டு பொருளாதாரச் செயல்பாடுகளில் சுற்றுலாவின் தாக்கம்

சுற்றுலாவின் சமுதாய முக்கியத்துவம்

நவீன காலத்தில் சுற்றுலாவின் முக்கியத்துவம்

பயண ஆவணங்கள்

வழிகாட்டும் நூல்கள்

முனைவர் ம. இரா. தங்கமணி

முனைவர் ஜெ. தர்மராஜ்

# சுற்றுலாவியல்

18K5EC ELEC1

## பொருளடக்கம்

சுற்றுலாவியல் ஓர் அறிமுகம்

சுற்றுலாவின் வகைகள்

பன்னாட்டு பொருளாதாரச் செயல்பாடுகளில் சுற்றுலாவின் தாக்கம்

சுற்றுலாவின் சமுதாய முக்கியத்துவம்

நவீன காலத்தில் சுற்றுலாவின் முக்கியத்துவம்

பயண ஆவணங்கள்

## வழிகாட்டும் நூல்கள்

முனைவர் ம. இரா. தங்கமணி

முனைவர் ஜெ. தர்மராஜ்

# 1. சுற்றுலாவியல் ஓர் அறிமுகம்
## (TOURISM - AN INTRODUCTION)

**முன்னுரை :** ஒருவர் தமது இருப்பிடத்தை விட்டு வெளியில் ஓரிடத்திற்குச் சென்று, தங்கி, மகிழ்ந்து, புத்துணர்வுப் பெற்று மீளுதல் சுற்றுலாவாகும். அருகில் உள்ள நகரம், வரலாற்றுப் பெருமை மிக்க நினைவுச் சின்னம், இயற்கையெழில் மிக்க இடம், கண்ணைக் கவரும் கலைக்கருவூலம் ஆகியவற்றிற்குச் சென்று, தங்கி மனநிறைவு பெறலாம் செலவச்சிறப்பு மிக்கோர் அயல் நாடுகளில் பயணம் செய்வதும் சுற்றுலாவே ஆகும்.

சுற்றுலாவியல் ஓர் வளர்ந்து வரும் கோட்பாடு; பல கோணங்களைக் கொண்டது. எனவே சுற்றுலா என்றால் என்ன ? சுற்றுலாப் பயணி யார் ? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண்பதில் அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை.

**சுற்றுலா எனும் சொல் :** சுற்றுலா பற்றிய விளக்கங்களை அறிவதற்கு முன்பு 'சுற்றுலா' எனும் சொல் எப்படி வந்தது என்பதைக் காண்பது அவசியம். Tour எனும் ஆங்கிலச் சொல் TORNUS எனும் லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்தது. டோர்னஸ் என்றால் சக்கரம். எனவே இச்சொல் சுற்றி வருவதைக் குறிக்கிறது. இவ்வாறு லத்தீன் மொழியினின்றும் பிறந்த Tour எனும்சொல் கி.பி. 1292 இல் ஆங்கில மொழியில் கலந்தது; பயணத்தைக் குறித்தது. பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பது டூர் ஆகும். டூரிஸ்ட் எனும் சொல் பயணி அல்லது யாத்ரீகரைக் குறிக்கும்.

மலர்க்காட்சி, நாயினக்காட்சி ஆகியவற்றைக் கண்டு களிக்கவும், புனிதத் தலங்களுக்கு யாத்திரை செய்யவும் சுற்றுலா செல்வதுண்டு. அறிவியல் முன்னேற்றம் பெருகியுள்ள தற்காலத்தில் மனிதன் மிகக் குறுகிய காலத்தில் குறைந்த செலவில் மிகத் தொலைவில் உள்ள இடங்களுக்கும் சென்றுவர முடிகிறது. எனவே ஓரிடத்தில் வசிப்போர் தமது ஓய்வு நேரத்தில் மற்றொரு இடத்திற்குச் சுற்றுப்பயணம் செய்து மனநிறைவு கொள்வதனைச் சுற்றுலா எனக் கூறலாம். சுற்றிவருதலின் இது சுற்றுலா ஆயிற்று. இராகுல் சாங்கிருத்தியாயன் இதனையே ஊர் சுற்றுதல் என்பார். சுற்றுலாப் பயணியை அவர் ஊர் சுற்றி என்றே அழைக்கிறார். சுற்றுலாத் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் அறிவியல் சார்ந்த படிப்பினையாக்கிக் கொள்ளும் நிலையைச் 'சுற்றுலாவியல்' என அழைப்பது பொருத்தமாகும்.

## பயணங்களின் காரணங்கள்

பண்டைய மக்கள் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்குப் பெயர்ந்து சென்றது வாழ்க்கைப் பயணம்; பொருளீட்டும் நோக்கத்துடன் துபாய் செல்வது பொருளீட்டுப் பயணம்; யூதர்கள் மோசஸ் தலைமையில் எகிப்து நாட்டிலிருந்து யூதேயாவிற்குச் சென்றது விடுதலைப் பயணம்; பக்தர்கள் காசி, இராமேஸ்வரம் செல்வது புனிதப் பயணம்; கம்ப்யூட்டர் படிப்பில் மேல் படிப்பிற்காக ஜப்பான் செல்வது கல்விப் பயணம்; ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் பழங்குடிகளின் வாழ்க்கை முறைகளை ஆராயச் செல்வது ஆய்வுப் பயணம்; மருத்துவச் சிகிச்சைக்காக நியூயார்க்கிற்கு விமானப் பயணம் மேற்கொள்வது மருத்துவப் பயணம்; எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்தைக்காண அதன் உச்சிக்கு ஏறினால் அது துணிகரப் பயணம்; ஜெனிவாவில் நடைபெறும் உலகத் தொழிலாளர் மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்வது தொழிற்பயணம்; ஆஸ்திரேலியாவின் தலைநகராம் சிட்னியில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுக்களைக் காணச் சென்றால் அது விளையாட்டுப் பயணம்; கைத்தறித்துணி ஏற்றுமதியாளர்கள் வணிகத்தை மேம்படுத்த அயல் நாடுகளுக்குச் செல்வது வணிகப் பயணம்; சிற்பக்கலையில் ஆர்வம் கொண்ட கலைஞர் ஒருவர் கஜீராகோ சிற்பங்களைக் காண கஜீராகோ செல்வது கலைப்பயணம். இவையனைத்தும் பயணங்களே ஆகும்.

மேற்கூறப்பட்ட அனைத்துப் பயணங்களும் பொதுவாக சுற்றுலாவாகக் கருதப்பெறுவதில்லை. ஏனெனில் இவர்கள் அனைவரும் தனக்கு ஆர்வமான ஒரே ஒரு செயலிலேயே ஈடுபடுகின்றனர். வணிக நிமித்தம் வெளிநாடு செல்வோர் வணிகத் தொடர்பான முகவர்களை,

(ஏஜெண்டுகளை) மட்டுமே சந்தித்துவிட்டு மற்ற இடங்களைப் பார்க்காமல் விரைவில் வந்து விடுகின்றனர்.

இருப்பினும் அரசுப் பணி நிமித்தமாக சென்னை செல்லும் அலுவலர் ஒருவர், தமது பணிகளை முடித்துக் கொண்டு வண்டலூர் மிருகக் காட்சி சாலை, சென்னை அருங்காட்சியகம், மெரினா கடற்கரை ஆகியவற்றையும் கண்டு களித்துத் திரும்புகின்றார். இதுபோன்ற அலுவலகப் பணியாளரின் அலுவலகப் பயணங்கூட, சுற்றுலாவாகவே கருதப்படுகின்றது.

எனவே இன்பப் பொழுது போக்கு, மகிழ்ச்சி, ஓய்வு, அரிய, பெரிய காட்சிகளைக் காணல், அறிவு வளர்ச்சி, கலைக்கோயில்களைக் காணுதல் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றிற்காகப் பயணம் செல்லலும் சுற்றுலாவின் பாற்படும்.

"ஓய்வு நேரத்தை அறிவுப் பூர்வமாய் பயன்படுத்தும் கலைதான் நாகரிகத்தின் மிகச் சிறந்த அடையாளம்" என்ற அறிஞர் பெட்ராண்ட் ரஸ்ஸல் கூற்றும் சிந்திக்கத் தக்கது. எனவே சுற்றுலா செல்லுதலும் நாகரிகத்தின் வளர்ச்சியே.

## அறிஞர்களின் விளக்கங்கள்

சுற்றுலாவின் இயல்புக் கூறுகளைப் பலர் பலவிதமாகச் சுட்டிக்காட்டுவர். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

"மனித செயல்பாடுகள். இயற்கைக் கூறுபாடுகள் ஆகியவற்றில் இதுகாறும் அறிந்திராதவற்றை ஆய்வு செய்யப் புகுதலே சுற்றுலா" என்பது பிரிமால்ட் அவர்களின் விளக்கமாகும். டாக்டர் ஹியாடின் அவர்கள் "ஓய்வு கவன மாற்றம் மற்றும் கலாசாரக் கூறுகளில் மனநிறைவளிக்கும் ஒரு சமூகச் செயல்பாடே சுற்றுலா" எனக் குறிப்பிட்டுள்ளார்.

"சுற்றுலா என்பது ஒருவர் தான் வாழ்ந்து வரும் அல்லது பணிபுரிந்து வரும் இடத்திலிருந்து வெளியிடத்திற்குக் குறுகிய காலமே சென்று தங்கி, அங்கு பல இடங்களுக்கு இன்பப் பயணம் சென்று பார்த்து வருவதாகும்" என்று 1976-இல் சுற்றுலாவிற்கு இங்கிலாந்து சுற்றுலாக் கழகம் விளக்கம் தந்தது.

"விளையாட்டுப் போட்டிகளைக் காணச் செல்லுதல், ஊர்களைச் சுற்றிப் பார்த்தல், சைக்கிள்களில் பயணம் செய்தல், உல்லாசப் படகுகளில் பயணம் செய்தல், முகாமிடல், மன மகிழ்வுக்காகப் பிற இடங்களை நோக்கிச் செல்லுதல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகக் கருதப்படுவதே

சுற்றுலா'' என்பது ஜோஸ் இக்னாசியோ டி. அரில்லாகா என்பவரின் வித்தியாசமான விளக்கம் ஆகும்.

1981-ல் இங்கிலாந்தில் கூடிய 'பன்னாட்டுச் சுற்றுலா மாநாடு' "சுற்றுலா என்பது ஒரு குறிப்பிட்ட மக்களால் தாங்கள் வாழ்ந்து வரும் சூழ்நிலைக்கு அப்பால் சென்று செயல்படும் நடவடிக்கைகளே ஆகும்" என்ற விளக்கத்தை அளித்தது.

"சுற்றுலா நவீன காலத்தில் ஒரு தனிச் சிறப்பிடத்தை வகிக்கின்றது. இழந்த வலிமையை மீண்டும் பெற, மாறுபட்ட சூழ்நிலைகளைக் காண, இயற்கை அழகினைக் கண்டு மகிழ அது ஒரு வளர்ந்து வரும் தேவையாகிவிட்டது" என்ற எஃபிரியூலர் அவர்களது விளக்கம் சுற்றுலாவின் நவீன கால அவசியத்தை வலியுறுத்துகின்றது.

பூர்கார்ட்டு மெட்லிக் போன்ற அறிஞர்கள் "சுற்றுலா என்பது ஒரு பயணியின் குறுகிய காலப் பயணமாகும். அவர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பயணம் செய்வர். அவர்கள் பிற இடங்களில் தற்காலிகமாகத் தங்குவர்" என்று சுற்றுலாவின் தன்மையைச் சுட்டுகின்றனர். அவர்கள் மேலும் "சுற்றுலா ஓய்வு நேரத்தோடும் உலகத்தோடும் தொடர்பு கொண்டது. அது ஒரு தொழில்சமுகம் ஆகும். நாடுகளும் நகரங்களும் கிராமப் பகுதிகளும் பயணிகளைக் கவர்ந்து இழுப்பதால் அதற்கு நல்ல எதிர்காலம் உள்ளது. அது செல்வத்தையும் வேலை வாய்ப்பையும் உருவாக்குகிறது." என்று சுற்றுலாவின் சிறப்பையும் கோடிட்டுக் காட்டுகின்றனர்.

ஜோவியக் என்பார் சுற்றுலாவை ஓர் சமுதாய இயக்கமாகவே காண்கிறார். "ஓய்வெடுப்பதற்காகவும், பொழுது போக்கிற்காகவும், கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமான ஒரு சமுதாய இயக்கம் இது" என்பது அவரது கருத்தாகும். எனவே சுற்றுலாவியல் தொழில் உறவு பூண்ட சமுதாய அறிவியலாக விளங்குகின்றது என்பது உண்மையாகும்.

ஆஸ்திரிய நாட்டுப் பொருளாதார நிபுணரான ஹெர்மன் வி.சுல்லார்டு என்பார் "ஒரு நாட்டிற்கோ, நகரத்திற்கோ, பிராந்தியத்திற்கோ வெளிநாட்டுப்பயணியர் வருகை புரிவது, தங்குவது, செலவது, பொருளாதார நோக்குடையது போன்ற அனைத்துச் செயல்பாடுகளின் தொகுப்பே சுற்றுலா'' என்று குறிப்பிட்டுள்ளமை சுற்றுலாவின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றது.

"பயணிகளின் பல்வேறு நடவடிக்கைகளின் கூட்டுத் தொகையே சுற்றுலா ஆகும். பொருள்தேடும் அடிப்படையிலோ, ஓரிடம் சென்று

# 2. சுற்றுலாவின் வகைகள் (TYPES OF TOURISM)

**முன்னுரை :** தற்காலத்தில் சுற்றுலா மக்களிடையே பெருஞ் செல்வாக்கு பெற்றுள்ளது. இது ஒரு தொழில், புகையில்லாத தொழில்துறை (Smokeless Industry). சுற்றுலா வாணிகம் ஒரு நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்து, செலுத்துதல் சமநிலையை (Balance of Payment) எய்த உதவுகிறது. எனவே இன்று அனைத்து நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு, சுற்றுலாவை மேம்படுத்துவதில் அதிக நாட்டம் செலுத்துகின்றன. சுற்றுலா பல வகைப்பட்டது. நோக்கம், தன்மை, இடம், தூரம், பயன்பாடு, தங்குகின்ற காலம் - ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலா பல வகையினவாகப் பகுக்கப்படுகின்றது.

பொதுவாகச் சுற்றுலாவை நாம் (அ) உள்நாட்டுச் சுற்றுலா (Domestic Tourism or Internal Tourism) (ஆ) அயல் நாட்டுச் சுற்றுலா (Foreign Tourism) என இருவகையாகப் பகுக்கிறோம். அயல்நாட்டுச் சுற்றுலாவைப் பன்னாட்டுச் சுற்றுலா (International Tourism) எனவும் அழைக்கலாம். இனி, சுற்றுலாவின் வகைககளைப் பற்றிக் காண்போம்.

## 1. உள்நாட்டுச் சுற்றுலா (Domestic Tourism)

ஒரு நாட்டில் வாழும் மக்கள் தமது நாட்டிற்குள்ளேயே சுற்றுப்பயணம் செய்வது உள்நாட்டுச் சுற்றுலாவாகும். இது சிக்கனமானது; எளிதானது; சிக்கல்கள் அற்றது. உள்நாட்டுச் சுற்றுலா, தேசியச் சுற்றுலா அல்லது நாட்டுச் சுற்றுலா எனவும் அழைக்கப் பெறுகின்றது. சுற்றுலாப் பயணியருள் 90 சதவிகிதத்தினர் உள்நாட்டுச் சுற்றுலாவை மேற்கொள்வதாக உலகச் சுற்றுலாக் கழகப்புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

இப்பயணியர் பெரும்பாலும் இன்பப் பொழுது போக்கு, இறைவழிபாடு, விடுமுறை, உடல் நலன், கல்வி, விளையாட்டுப் போட்டி, வாணிபம் - போன்றவற்றின் அடிப்படையில்தான் பயணம் செய்வர். இதற்கு பாஸ்போர்ட், விசா, நாணய மாற்று, மொழி - முதலான சிக்கல்கள் எவையுமில்லை.

அ). உள்நாட்டுச் சுற்றுலாவின் தன்மை

உள்நாட்டுச் சுற்றுலாவிற்கான தூரம் இதுகாறும் துல்லியமாக வரையறுக்கப்பட வில்லை. பொதுவாக 25 மைல் தொலைவிலிருந்து 100 மைல் தொலைவு வரை பயணம் செய்தலை உள்நாட்டுச் சுற்றுலா எனலாம். இவ்வரையறை நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது. ஆஸ்திரேலியாவில் 25 மைல் பயணம் செய்பவர் உள்நாட்டுச் சுற்றுலாவில் கலந்து கொண்டதாகக் கருதப்படுகிறார். ஆனால் அமெரிக்காவிலோ உள்நாட்டுச் சுற்றுலாவின் குறைந்த அளவு பயண தூரம் 50 மைல்கள்.

பன்னாட்டுச் சுற்றுலா அமைப்பு (IUOTO) உள்நாட்டுச் சுற்றுலா பற்றிக் கீழ்க்காணும் விளக்கத்தைக் கூறுகின்றது.

"ஒரு நபர் தான் வாழும் இடத்தை விட்டு, தன்னாட்டிற்குள்ளேயே , வேறு இடத்திற்குப் பயணம் சென்று, எந்தவித பணவருவாயுமின்றி, தான் தங்குமிடங்களில் 24 மணிநேரம் அல்லது ஒரு இரவு தங்கியிருப்பவர் உள்நாட்டுப் பயணி என அழைக்கப்படுபவர்".

இவ்விளக்கத்தில் பயண தூரத்தைப் பற்றிய குறிப்பு இல்லை. ஆனால் காலத்தைப்பற்றிய குறிப்பு - அதாவது குறைந்தது 24 நேரம் தங்குதல் பற்றிக் குறிப்பிடுகின்றது. எனவே 24 மணி நேரத்திற்குக் குறைவான பயணம் உள்நாட்டுச் சுற்றுலா ஆகாது. உள்நாட்டுச் சுற்றுலாவில் குறைந்த செலவில் பல இயற்கையழகு மிக்க இடங்களையும் கவின்மிகு நினைவுச் சின்னங்களையும் கண்டு மகிழலாம்.

## 2. பன்னாட்டுச் சுற்றுலா (International Tourism)

ஒருவர் தனது தாய் நாட்டைவிட்டு வேறு நாடுகளுக்குப் பயணம் செய்வது பன்னாட்டுச் சுற்றுலா அல்லது அயல் நாட்டுச் சுற்றுலா எனப்படும். வெளிநாட்டுச் சுற்றுலாவிற்கு கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) தங்கும் உரிமை (விசா), ஆரோக்கியச் சான்றிதழ் முதலான ஆவணங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு ஆகாய விமானப் பயணம் பேருதவி புரிகின்றது. பன்னாட்டுச் சுற்றுலாவிற்கு ஏற்பாடுகள் செய்யப் பல பயண அலுவலகங்கள் உள்ளன. மேற்கு ஐரோப்பிய நாடுகள் பன்னாட்டுச் சுற்றுலாவில் பேரார்வம் காட்டுகின்றன. இவற்றுள் ஜெர்மனி முதலிடம் வகிக்கின்றது. பன்னாட்டுச் சுற்றுலா உலக மக்களிடையே

நல்லெண்ணத்தையும், நட்பையும் வளர்த்து உலக அமைதிக்கு வழிகோலுகின்றது.

(கடவுச் சீட்டு, தங்கும் உரிமை பற்றிய செய்திகளைப் பயண ஆவணங்கள் எனும் தலைப்பில் விரிவாகக் காணலாம்.)

பயணியரின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாவினை (அ) தனிநபர் சுற்றுலா (ஆ) குழுச் சுற்றுலா அல்லது மக்கள் சுற்றுலா (MASS TOURISM) என இருவகையாகப் பிரிக்கலாம்.

### 3. தனிநபர் சுற்றுலா (Individual Tourism)

ஒருவர் மட்டும் தனியாகச் சுற்றுலா மேற்கொள்வதனைத் தனிநபர் சுற்றுலா அல்லது தனிச் சுற்றுலா என்கிறோம். இதில் இவர் சுற்றுலாப் பயணத்திற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் தானே செய்து கொள்ள வேண்டும். சிலர் தனிச் சுற்றுலாவை விரும்புவர். இருப்பினும் இதில் கலகலப்போ, மகிழ்ச்சியோ இருக்காது.

### 4. குழுச் சுற்றுலா (Group Tourism)

ஒருவருக்கு மேற்பட்ட பயணிகள் குழுவாகச் சேர்ந்து சுற்றுலா செல்வது குழுச் சுற்றுலாவாகும். அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டால், இதனை மக்கள் சுற்றுலா (Mass Tourism) எனவும் அழைப்பர். குழுச் சுற்றுலா மகிழ்ச்சியும் பாதுகாப்பும் நிறைந்தது; குறைந்த செலவில் பல இடங்களுக்கு வசதியாகச் சென்று திரும்பமுடிகிறது. இதனால் சகோதரத்துவமும் நட்பும் வளர்கிறது. பள்ளி, கல்லூரி மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள், தொழிலாளர்கள் - ஆகியோருக்கு இதுவே ஏற்றது; வசதியானது; சிரமங்கள் அற்றது. அரசாங்கம் ஆசிரியர்களுக்காக ரயிலில் கட்டணச் சலுகை அளிக்கிறது. இதனால் குறைந்த வருமானம் உள்ளவர்களும் தொலைதூர இடங்களுக்குச் சுற்றுலா மேற்கொள்ள இயலுகிறது.

அண்மைக் காலத்தில் குழுச் சுற்றுலா பலராலும் விரும்பப் படுகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இது மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. தனியார் நிறுவனங்கள் தங்களது தொழிலாளர்களுக்குச் சுற்றுலாச் செல்ல, சம்பளத்துடன் விடுமுறையும் பொருளுதவியும் புரிந்து வருகிறது. தனிநபர் சுற்றுலாவைக்காட்டிலும் குழுச் சுற்றுலா சிரமங்கள் அற்றது; மகிழ்ச்சிகரமானது.

### 5. பண்பாட்டுச் சுற்றுலா (Cultural Tourism)

பிற நாட்டு மக்கள், அவர்களது வரலாறு, நுண்கலைகள், தத்துவங்கள், பழக்க வழக்கங்கள் அயல்நாட்டு மக்களது பண்பாடு,

கல்விநிலை, அறிவியல் வளர்ச்சி - போன்றவற்றைக் காண்பதற்காக மேற்கொள்ளப்படும் பயணமே பண்பாட்டுச் சுற்றுலா எனப்படும். ஒரு நாட்டு மக்களின் சமுதாய வாழ்க்கை, கலை, அருங்காட்சியகம், வரலாற்றுச் சின்னங்கள், நினைவுச் சின்னங்கள், திருக்கோயில்கள், கலை விழாக்கள், இசை, நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், திருவிழாக்கள் - ஆகியனவற்றைக் கண்டு களிப்பதே பண்பாட்டுச் சுற்றுலா. ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டைப் புரிந்து கொள்வதால் பன்னாட்டு உறவு வளரும்.

இந்தியா பண்பாட்டுப் பாரம்பரியம் மிக்கது; ஏறத்தாழ 5000 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டது. ஆன்மிகத் துறையில் உலகிற்கோர் வழிகாட்டியாகத் திகழ்வது. எனவே இந்தியாவில் கலாச்சார மையங்களுக்குப் பஞ்சமில்லை. நம் நாட்டின் கலாச்சார மையங்களுள் முக்கியமாகக் கருதத்தக்கவை -

1. அஜந்தா, எல்லோரா, எலிபெண்டா, சித்தன்னவாசல் - முதலான குடைவரைக்கோயில்கள்.

2. நாளந்தா, சாரநாத், கயா, குசி நகரம், காஞ்சிபுரம் - முதலான பௌத்தத் தலங்கள்.

3. கோவா, பாடலிபுத்திரம், ஹம்பி, பாதாமி, கஜுராஹோ, கொனாரக், புவனேசுவரம், சீரங்கம், பூரி, மதுரா, காசி, இராமேசுவரம், மதுரை, தஞ்சாவூர், ஆக்ரா - முதலான வரலாற்று முக்கியத்துவம் மிக்க பண்பாட்டு மையங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும். (பண்பாட்டுச் சுற்றுலா - எனும் தனித் தலைப்பில் விரிவான செய்திகளைக் காணலாம்.)

## 6. கல்விச்சுற்றுலா (Educational Tourism):

அரியனவற்றை; பெரியனவற்றை; புதியனவற்றைக் காண வேண்டும்; தனது அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும், ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் - எனும் தூய நோக்கத்துடன் செய்யும் பயணம் கல்விச் சுற்றுலா எனப்படும். அண்மையில் கல்விப்பாடத் திட்டத்தில் சுற்றுலாவும் ஒரு திட்டமாக, பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர்களும் மாணவர்களும் அறிவியல், புவியியல், கலை - முக்கியத்துவம் பெற்ற இடங்களுக்குச் சுற்றுலா செல்கின்றனர்.

கலை பயிலும் மாணவர்கள் தஞ்சாவூர், மாமல்லபுரம், கிருஷ்ணாபுரம், பேரூர், தாரமங்கலம், தாடிக்கொம்பு, ஹளபீடு, பேலூர், கஜுராஹோ முதலான கலைவளம் மிக்க இடங்களுக்கும், அறிவியல் மாணவர்கள் தும்பா ராக்கெட் ஏவுதளம், கோளரங்கம் (பிளானடோரியம்)

முதலான அறிவியல் சோலைகளுக்கும், தாவரவியல் மாணவர்கள், உதகமண்டலம், களக்காடு - முதலான தாவரப்பண்ணைகளுக்கும் - தங்கள் பாடங்களின் தொடர்பான கண்காட்சிகளுக்கும், கருத்தரங்குகளுக்கும் பணிப்பட்டறைகளுக்கும் (Work shops) செல்லுதல் கல்வியை மேம்படுத்தும். கல்விச் சுற்றுலாவின் மூலம் மாணவர்கள் நேரடிக் கல்விபெறும் வாய்ப்புள்ளது. தனிச் சிறப்புப் படிப்பு, மேல்படிப்பு - ஆகியவை மேற்கொள்ள கல்விச் சுற்றுலாவே தலைசிறந்தது. கீழ்க்காண்பன வற்றிற்காக மேற்கொள்ளப்படும் பயணங்கள் கல்விச் சுற்றுலாவில் அடங்கும்.

- அ. அறிவியல் தொழில்நுட்ப மையங்கள்.
- ஆ. புவியியல் முக்கியத்துவம் மிக்க இடங்கள்.
- இ. வரலாற்றுச்சின்னங்கள், நினைவுச்சின்னங்கள்.
- ஈ. பண்பாட்டு மையங்கள்.
- உ. ஆய்வுக் கருத்தரங்குகள், பணிப்பட்டறைகள்.
- ஊ. கலைக் கூடங்கள், அருங்காட்சியகங்கள். ஆவணக் காப்பகங்கள்
- எ. மேற்பட்டப்படிப்பு, ஆய்வு, தனிச் சிறப்புப் பட்டம்.

## 7. சமூகச் சுற்றுலா (Social Tourism)

சுற்றுலாவிற்கான செலவினத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களால் மேற்கொள்ளப்படும் சுற்றுலாவே, சமூகச் சுற்றுலா ஆகும். "சமூகத் தலையீடின்றி அதாவது அந்நபர் சார்ந்துள்ள சமூக நிறுவனத்தின் உதவியின்றி பயணம் செய்யமுடியாது" எனும் நிலையில் உள்ளவர்களே சமூகச் சுற்றுலாவில் ஈடுபடுவர். சில சமயங்களில் அரசாங்கமே முன்வந்து மக்கள் சுற்றுலா செல்வதற்கான வசதிகளையும், சலுகைகளையும் அளித்து, ஏற்பாடு செய்து தருவதே சமூகச் சுற்றுலாவாகும்.

எனவேதான் ஆண்டர பாப்ளிமாண்ட் (ANDRA POPLIMONT) என்னும் அறிஞர் "சுற்றுலாவிற்கான செலவுகளைத்தான் சார்ந்திருக்கும் சமுதாய அமைப்புகளின் ஆதரவுடனும், அவைகளின் உதவி பெற்றுக் கொண்டும் அமைத்துக் கொள்வதே சமுதாயச் சுற்றுலா" என வரையறுத்துள்ளார். அடுத்து

"சமூகச் சுற்றுலா என்பது குறைந்த வருவாய் உடையவர்கள், முழுவதும் மற்றவர்களின் ஆதரவுடனும், உதவியுடனும் பயணம்

# 4. பன்னாட்டுப் பொருளியல் செயல்பாடுகளில் சுற்றுலாவின் தாக்கம் (THE IMPACT OF TOURISM ON INTERNATIONAL ECONOMIC ACTIVITY)

**முன்னுரை** : ஏற்றுமதி சம்மந்தப்பட்ட தொழில்களுள் சுற்றுலாத் தொழில் மிகவும் முக்கியமானது. ஏற்றுமதியைப் போல்வே சுற்றுலாத் தொழிலிலும் பெருமளவில் அந்நியச் செலவாணி கிடைக்கிறது. உலக மொத்த ஏற்றுமதியின் மதிப்பில் சுற்றுலாத் தொழிலின் பங்கு 8% ஆக உள்ளது. உலக அளவிலான சுற்றுலாத் தொழில் வர்த்தக மதிப்பு 350 மில்லியன் அமெரிக்காடாலர்களாக உள்ளது. சுற்றுலா ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துகிறது. அடுத்து சுற்றுலா ஒரு நாட்டின் சமூக - பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்துணைபுரிகின்றது. அதுவே பன்னாட்டு வாணிகத்தின் இரண்டாவது பெரிய பொருளாதாரச் செயல்பாடாக உள்ளது. அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்து, நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்செய்ய உதவுவதும் சுற்றாலவே ஆகும். இது தனிமனித வருமானத்தையும், தேசிய வருமானத்தையும் பெருக்குகிறது. தேசிய ஒருமைப்பாட்டின் வளர்ச்சிக்குத் துணைபுரிவதுடன் உலக சமாதானத்திற்கும் உறுதுணையாக உள்ளது. பல நாடுகளின் ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பைக் காட்டிலும் சுற்றுலா அதிக வருமானத்தை ஈட்டித் தருகின்றது. இவ்விதமாக சுற்றுலாவின் மூலம் வரும் வருமானம் வளரும் நாடுகளின் வருமானத்தின் முக்கிய ஆதாரமாகத் திகழக்கின்றது. எனவே பன்னாட்டுப் பொருளாதாரச் செயல்பாடுகளில் சுற்றுலாவின் தாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது என்பதனை அறியலாம்.

செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அடுத்து சுற்றுலா உலக நாடுகளின் வருமானத்திற்குப் பெரும் ஆதாரமாக உள்ளது.

எடுத்துக்காட்டாகச் சுற்றுலாத் தொழிலின் மூலம் 1996 இல் சீனா 12.1 பில்லியன் டாலர்களையும் ஹாங்காங் 10.8 பில்லியன் டாலர்களையும் தாய்லாந்து 8.7பி. டாலர்களையும், சிங்கப்பூர் 7.9 பி. டாலர்களையும் இந்தியா 3 பி டாலர்களையும் வருவாயாகப் பெற்றதையும் சுட்டலாம்.

**தொழில் தகுதி :** பல நாடுகளில் சுற்றுலா இன்று ஓர் தொழிலாகவே வளர்ந்துள்ளது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சுற்றுலாவே முக்கிய காரணமாக உள்ளது என்பதனை உணர்ந்த தேசிய வளர்ச்சிச் சபை (National Development Council) 1984 இல் சுற்றுலாவிற்குத் தொழில் தகுதியை (அந்தஸ்தை) வழங்கியுள்ளது. இன்று பெரும் பாலான நாடுகள் சுற்றுலா வளர்ச்சியின் மூலம் கணிசமான வருவாயைப் பெறுகின்றன. இவ்வருவாய அந்நாடுகளின் மற்ற ஏற்றுமதிப் பொருள்களின் மொத்த வருமானத்தில் குறிப்பிடத்தக்கதோர் பங்கினை வகிக்கிறது. இவ்வாறு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தருவதிலும் சுற்றுலாப் பெரும் பங்கு வகித்து வருகிறது. 1992ஆம் ஆண்டில் மட்டும் அனைத்துநாடுகளும் சுற்றுலாவின் மூலம் 205 பில்லியன் ரூபாய்களைச் சம்பாதித்துள்ளன. அயல்நாட்டுப் பயணிகளிடமிருந்து கிடைக்கும் தொகை, ஒரு கையிலிருந்து அடுத்த கைக்குக் கிடைக்கும் தொகை. ஒரு கையிலிருந்து அடுத்த கைக்கு மாறி, அங்கிருந்து பல கைகளுக்கு மாறுவதால் அவற்றின் மதிப்பு பன்மடங்காகப் பெருகிறது. இதன் பெருக்கம் விரைவாகவும் உள்ளது. ஒவ்வொரு ரூபாயும் 3.2 மடங்கிலிருந்து 4.3 மடங்கு வரைப் பெருகுவதாக அண்மைக் கால கணக்கீடுகள் தெரிவிக்கின்றன. அவ்வாறெனில் உலக நாடுகள் ஈட்டியுள்ள 205 பில்லியன் ரூபாய்கள் 656 பில்லியனிலிருந்து 882 பில்லியன் ரூபாய்கள் வரை மதிப்புடையது என்பது அறியப்படுகின்றது.

**அந்நியச் செலாவணியைப் பெறுதல்**

இன்று உலக அளவிலான சுற்றுலாத் தொழில் வர்த்தக மதிப்பு 350 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கிறது. உலக நாடுகள் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணியரின் வசதிக்காகப் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த சொகுசு கார், நவீன ஆகாய விமானம் போன்றவற்றிற்காகச் செலவு செய்ய வேண்டியுள்ளது. அடுத்து தன் நாட்டவர் அயல்நாடுகளில் சுற்றலா மேற்கொண்டு செலவழிக்கும் தொகையும் உள்ளது. அந்த இரண்டு செலவுத் தொகைகளையும் கழித்து

போக எஞ்சியுள்ள தொகையே உலகநாடுகளின் நிகர லாபமாகும். இந்நிகர லாபம் வளரும் நாடுகளில் அதிகமாகவே உள்ளது. எனவே சுற்றுலாவின் மூலம் வளரும் நாடுகளும், பின்தங்கிய நாடுகளும் பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டி வருகின்றன என்பது புலனாகும். நம்நாடு 1987-88 இல் 1856.1 கோடி ரூபாய்கள், 1988-89 ஆம் ஆண்டில் 2103 கோடி ரூபாய்கள் 1989-90 இல் 2456 கோடி ரூபாய்கள் மதிப்புள்ள அந்நியச் செலாவணியைச் சுற்றுலாத் துறையின் மூலம் ஈட்டியுள்ளது. 1999 இல் ஒரு அயல்நாட்டுப் பயணி நம் நாட்டில் சராசரியாக ரூ. 16,000 செலவழிக்கிறார்.

**ஆஸ்திரியா, கிரீஸ், போர்ச்சுகல்.**

இன்று உலகில் பல நாடுகள், சுற்றுலா வருமானத்தையே முதன்மையாகக் கொண்டுள்ளன. எடுத்துக் காட்டாக ஸ்பெயின், மெக்சிகோ, ஜோர்டன், பனாமா முதலான நாடுகளைச் சுட்டலாம். பிரிட்டன், அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பிற பொருள்களைக் காட்டிலும், சுற்றுலாவின் மூலமே அதிக டாலர்களைப் பெறுகிறது. கனடாவும் செய்தித்தாளுக்கு (News Print) அடுத்த நிலையில் சுற்றுலாவின் மூலமே அதிகமான அந்நியச் செலாவணியைப் பெறுகிறது. பலநாடுகள் அண்மைக் காலத்தில் சுற்றுலாத்துறையை விரிவுபடுத்திப் பெரும்பொருள் ஈட்டுகின்றன. இன்று 24 நாடுகளில் ஏற்றுமதி செய்யப்படும் மூன்று முக்கிய பொருட்களில் சுற்றுலாவும் ஒன்றாகத் திகழ்கிறது. எனவே இன்று பல நாடுகள் தங்களது பொருளாதார நிலையை வலுப்படுத்த,சுற்றுலாத் தொழிலையே நம்பியுள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. சில நாடுகளின் கண்ணுக்குப் புலனாகாத வருவாயில் சுற்றுலா வருவாயே முதன்மையாக உள்ளது. எடுத்துக்காட்டாக இத்தாலி, கனடா, ஆஸ்திரியா, மெக்ஸிகோ, ஸ்பெயின் முதலான நாடுகளைச் சுட்டலாம். இந்நாடுகள் சுற்றுலா வளர்ச்சியின் மூலம் அன்னிய செலாவணியைக் குவிக்கின்றன.

**வேலை வாய்ப்பு**

சுற்றுலா ஒரு நாட்டின் வருவாயைப் பெருக்குவதுடன் பலருக்கு வேலை வாய்ப்பையும் வழங்குகிறது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவு குறைகிறது. பன்னாட்டளவில் பல்வேறு தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் ஏழு சதவிகிதத்திற்கு மேற்பட்டோர் சுற்றுலாததுறையில் பணிபுரிகின்றனர் என்று அறிஞர் லிகோர்ஸ் என்பார் கணித்துள்ளார். பிற தொழில்களைக் காட்டிலும் சுற்றுலாத் தொழில் அதிகப் பேர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்குகிறது. சுற்றுலாத் தொழிலில் வேலையாட்கள் முதலீடு விகிதமானது

# 6. சுற்றுலாவின் சமுதாய முக்கியத்துவம்

## (SOCIAL SIGNIFICANCE OF TOURISM)

இன்றைய உலகில் சுற்றுலா ஒரு பயன்மிகு தொழிலாக விளங்குகிறது. ஒரு நாட்டின் கண்ணுக்குத் தெரியாத ஏற்றுமதிப் பொருள்தான் சுற்றுலா. சுற்றுலா மூலம் ஒரு நாடு பல்வேறு வழிகளில் பயன்பெறுகிறது. சுற்றுலா மூலம் நாட்டின் தேசிய வருவாய் அதிகரிக்கிறது. இதனால் நாடு பொருளாதார வளர்ச்சியடைந்து பல துறைகளில் முன்னேறுகிறது. நாடு மட்டுமல்லாது தனிநபரும் பயன் அடைகிறான். சுற்றுலா பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துறையாக இருப்பதுடன் சமுதாய முக்கியத்துவமும் பெற்றுள்ளது. சமுதாயத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. சமுதாய வளர்ச்சிக்கு பெரும் பங்கேற்றுகிறது. சமுதாய அமைப்பு முறையிலும், வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இங்கு சுற்றுலாவின் சமுதாய முக்கியத்துவத்தைப் (நன்மைகள்) பற்றி காண்போம்.

### 1) தேசிய ஒருமைப்பாடு வளர்கிறது

**(Promts of National Integretion):**

சுற்றுலாவின் மூலம் தேசிய ஒருமைப்பாடு வளர்கிறது. ஜாதி வேறுபாடுகள், மத அடிப்படைவாதம், மொழி வேற்றுமைகள் ஆகியவை மக்களிடையே பிளவை ஏற்படுத்தி அமைதியைக் கெடுக்கின்றன. இப்படிப்பட்ட சமுதாயக் கேடுகள் காணப்படும் இந்தியா போன்ற நாடுகளில் சுற்றுலா வேற்றுமையில் ஒற்றுமையைப் பெறுகிறது. சுற்றுலா செல்லும் பயணி பிற மாநிலங்களில் வாழும் மக்களுடன் கூடிப்பேசி மகிழ முடிகிறது. வடமாநிலத்தவர் தென் மாநிலங்களுக்கும், தென் மாநில மக்கள் வடமாநிலங்களுக்கும் செல்லும் போது தேசிய ஒருமைப் பாட்டுணர்ச்சி ஏற்படுகிறது. இதனால் தேசிய ஒருமைப்பாடு வலுவடைகிறது.

### 2) மனிதனுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது:

**(Gives happiness to man):**

சுற்றுலா மனிதனுக்கு மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. அன்றாடம் உழைத்து, உழைத்து அலுத்துப் போன தொழிலாளிக்கு சுற்றுலா இன்பம் தருகிறது. தொழிற்சாலையிலுள்ள எந்திரங்களையே சந்தித்துக் கொண்டிருந்த தொழிலாளி சுற்றுலாவின் மூலம் புதிய சூழ்நிலையில் மகிழ்ச்சியடைகிறான். இயற்கையழகில் மனதைப் பறிகொடுக்கிறான். கவலைகளை மறந்து கடற்கரை மணலில் இன்பம் காண்கிறான். புத்துணர்ச்சி பெறுகிறான். இவ்வாறு மனிதரின் மனதுக்கு மன மகிழ்ச்சி தரும் சுற்றுலா மனிதனின் உடல்

நலத்தையும் பெறுகிறது. இதனால் சமுதாயம் நலன் பெறுகிறது. சமுதாயத்தில் ஏற்படும் பல தீய விளைவுகள் இதனால் தடுக்கப்படுகிறது.

## 3) மனிதநேயம் வளர்ச்சியடைகிறது : Develops humanism

மனித நேயம் வளர்ச்சியடைய சுற்றுலா துணைபுரிகிறது. பிறபகுதி மக்களுடன் நெருங்கிப் பழகும் போது அவர்களைப் புரிந்துகொண்டு அன்பு செலுத்த முடிகிறது. பிற நாட்டு மக்களுடன் இணக்கமான நல்லுறவு கொள்ள ஏதுவாகிறது. ஒரு நாட்டின் பிறபகுதி மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது பிராந்திய வெறி தளர்வடைந்து தேசிய உணர்வு வளர்கிறது. இதன்மூலம் 'உலகக் குடிமகன்' (Citizen of the world) என்ற தாராளப் பண்பு வளர்கிறது. பன்னாட்டுறவு வலுப்படுகிறது.

## 4) வாழ்க்கைத்தரம் உயர்கிறது (Standard of living improves):

ஒரு நாட்டில் வெளிநாட்டு சுற்றுலா அந்நிய செலாவணியை ஈட்டித் தருகிறது. உள்நாட்டுச் சுற்றுலா வருவாய் மாற்றத்தினை ஏற்படுத்துகிறது. மேலும் அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்துகிறது. இதனால் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது. அதிக வருமானம் கிடைப்பதால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்கிறது. உதாரணமாக மதுரையை எடுத்துக் கொண்டால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வருமானம் கிடைக்கிறது. சுற்றுலாப் பயணிகள் இல்லையென்றால் அவர்களுக்கு வருமானமும் இல்லை என்ற நிலை உள்ளது. எனவே சுற்றுலா மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

## 5) தனி மனித அறிவு பெருகுகிறது :

(Development of peoples knowledge):

சுற்றுலாவினால் தனிமனித அறிவு பெருகுகிறது. பிறநாடுகளுக்கும், தனது நாட்டின் பிற பகுதிகளுக்கும் செல்வதால் சுற்றுலாப் பயணியின் பொது அறிவு வளர்ச்சியடைகிறது. பிற நாடுகளின் வரலாறு, பண்பாடு மற்றும் பொருளாதார நிலைபற்றி அறிந்துகொள்ள முடிகிறது. மனிதன் நவீன அறிவியல் முன்னேற்றத்தையும், தொழில் வளர்ச்சியையும் அறிந்து கொள்கிறான். பழங்காலத்தில் பல அறிஞர்கள் பல இடங்களுக்குப் பயணம் சென்று வந்ததால் தான் தங்கள் அறிவை விருத்தி செய்து கொள்ள முடிந்தது. தனிப்பட்ட முறையாக நேரடியாகப் பார்த்து, கேட்டு தெரிந்து கொள்ளுவதால் அறிவு விருத்தியடைகிறது. இவ்வாறு சுற்றுலா மனிதர்களின் அறிவை விருத்தி செய்து கொள்வதற்கு பெரிதும் உதவுகிறது.

## 6) உலக அமைதி மற்றும் பன்னாட்டு ஒற்றுமை உணர்வு (International understanding):

சுற்றுலா பன்னாட்டு ஒற்றுமை உணர்வை வளர்க்கிறது. நமது நாட்டுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளை இன்முகத்தோடு உபசரித்து, நல்ல வசதிகளை அளித்து, அவர்களைச் சரியாகப் புரிந்துகொண்டு நட்புணர்வுடன் அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கும்போது நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. தனிப்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படும் இந்த நெருங்கிய உறவுகள் நாளடைவில் அவர்களின் நாட்டின் பால் நட்புணர்வுகள் ஏற்படுகிறது. இதனால் நேசநாடுகளாகி உலக அளவில் பகைமை விரோதம் ஆகியவை ஒழிக்கப்பட்டு சர்வதேச அளவில் நிரந்தர அமைதி ஏற்பட வழிவகை செய்கிறது.

## 7) இருவழித்தட இராஜாங்கக் கொள்கை (Two ways diplomatic Policy):

இருவழித்தடங்கள் என்றால், அரசாங்கமே அரசியல் ரீதியாக பிறநாடுகளிடையே பரஸ்பர உறவை மேற்கொண்டும், ஒப்பந்தங்கள் ஆகியவற்றில் கையெழுத்திட்டும் உறவுகளை ஏற்படுத்திக்கொள்வது முதல் வழித்தடம் ஆகும். இரண்டாவது வழித்தடம் என்பது ஒரு நாட்டு மக்கள் பிறநாட்டு மக்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் உறவு முறைகள், நட்பு ஆகியவையாகும். இது இரண்டாவது வழித்தடம் ஆகும். இந்த இரு வழித்தட ராஜாங்கக் கொள்கையை முறையாகக் கடைப்பிடித்தால் பல சமுதாய நற்பயன்களைப் பெறமுடியும். காழ்ப்புணர்ச்சியை போக்கி நிரந்தர நட்பு பாலத்தை ஏற்படுத்தி தருகிறது. இதற்கு சுற்றுலா பேருதவி செய்கிறது.

## 8) பண்பாட்டு பரிமாற்றம் (Exchange of cultural value):

சுற்றுலாப் பயணிகள் நாகரிகம் பண்பாடு ஆகியவற்றை பிற மக்களிடம் பரப்புகிறார்கள். இதனால் இரண்டு மாறுபட்ட பண்பாடு கொண்டவர்கள் ஒன்று சேர்கிறார்கள். மற்றவர்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிய மனிதன் முற்பட்டதனால்தான் சுற்றுலாவே தோன்றியது. சுற்றுலாப் பயணிகளிடம் பழமையான நாகரிகம், பண்பாடு, பண்பாட்டுச் சின்னங்கள் போன்றவற்றை அறிய வேண்டும் என்ற ஆவல் இருப்பதை அறியலாம். சுற்றுலாவினால் ஒரு நாட்டு நாகரிகம் இன்னொரு நாட்டில் பரவ வாய்ப்பு உள்ளது. அதே நேரம் அந்த நாட்டின் பழமை, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை நிலை நிறுத்திக்கொள்ளவும் வழிவகை செய்கிறது.

## 9) கலை மற்றும் கிராமியக்கலை பேணிகாக்கப் படுகிறது : (Protects Folk Arts)

சுற்றுலா கலை மற்றும் கிராமியக் கலைகளைப் பேணிக்காப்பதற்கு
உதவுகிறது. சுற்றுலாத்துறையானது நம் நாட்டின் பண்பாடு, கலாச்சாரம்,
கலைகள், கிராமியக் கலைகள் ஆகியவற்றைப் பேணிக்காக்கும் வகையில்
கண்காட்சிகள், திருவிழா போன்றவைகளை நாடு முழுவதும் நடத்தி வருகிறது.
இது போன்ற கலைக்கூடங்களில் இந்தியப் பண்பாட்டிற்கே உரித்தான நடனக்
கலைகள், நாட்டியக்கலைகள், கிராமியக்கலைகள் இடம் பெறுகின்றது. இதனால்
சுற்றுலாப் பயணிகள் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றனர். இதனால்
இத்தக்கலைகள் புத்துயிர் பெறுகின்றன. அழியாமல் பாதுகாக்கப் படுகின்றன.
எனவே சுற்றுலா கலை மற்றும் கிராமியக் கலைகளைப் பேணிப் பாதுகாக்கிறது.

## 10) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன :

(Protects historical Movement

பொதுவாகச் சுற்றுலாப் பயணிகள் ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாடு,
கலை ஆகியவற்றை வெளிப்படுத்தும் பழங்காலச் சின்னங்களைப் பார்க்க
வேண்டும் என்பதிலேயே ஆவல் கொள்ளுகின்றனர். நினைவுச் சின்னங்களைப்
பார்க்கும்போது அதனை உற்றுநோக்கி, அதோடு கலந்துவிடுகிறார்கள். இதில்
அவர்களுக்கு நிம்மதியும், திருப்தியும், புதிய உற்சாகமும் ஏற்பட்டு நல்ல
அனுபவங்களைப் பெற்றுத் திரும்பிச்செல்கின்றனர். எனவே ஒவ்வொரு அரசும்
தங்கள் நாட்டில் உள்ள பழங்காலக் கலை மற்றும் நினைவுச் சின்னங்களைப்
பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.
இவ்வாறு சுற்றுலாவினால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பேணிப்
பாதுகாக்கப்படுகின்றன.

## 11) விலங்குகள் மற்றும் தாவர வகைகள் பேணிப் பாதுகாக்கப் படுகின்றன (Protection of flora and fauna) :

சுற்றுலாவினால் விலங்குகள் மற்றும் தாவரவகைகள் பேணிப்
பாதுகாக்கப்படுகின்றன. வெளிநாட்டுப் பயணிகள் பல்வேறு காரணங்களுக்காக
நமது நாட்டிற்கு வருகை புரிந்தாலும் இயற்கை வளங்களைக்கண்டு ரசிப்பதிலும்,
பல அரிய தாவர இனங்களையும் விலங்குகளையும் கண்டு உற்சாகம்
அடைகிறார்கள். எனவே பறவை சரணாலயங்கள், வனவிலங்கு சரணாலயங்

18ICBECEL6

## 5. நவீன காலத்தில் சுற்றுலாவின் முக்கியம் – குறிப்பாக இந்தியாவைப் பற்றி

கற்காலம் முதல் தற்காலம் வரையில் பயணங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இப்பயணங்கள் அனைத்தும் சுற்றுலா அல்ல. பழங்காலச் சுற்றுலா தற்காலச் சுற்றுலாவினின்றும் வேறுபட்டது. பலர் அன்று பெரும்பாலும் பொருள் தேடவே பல இடங்களுக்குச் சென்றனர், வணிகத்தின் பொருட்டும், போர்புரியும் பொருட்டும், கல்வி கற்கும் பொருட்டும் அன்று பலர் வெளியிடங்களுக்குச் சென்றனர். பொருளாதார வசதியும், போக்குவரத்து வசதியும், அறிவியல் முன்னேற்றமும், தங்குமிட வசதியும் அன்று இல்லாத காரணத்தால், சுற்றுலா வளர்ச்சி பெறாத நிலையில் இருந்தது. காலம் செல்லச் செல்லப் புதிய நாடுகளைக் காணும் ஆர்வம் பெருகியது. அதற்கேற்பப் போக்குவரத்து வசதிகளும் பெருகின. இரயில், கார், சொகுசு கார், கப்பல், ஆகாயவிமானம், ஜெட் விமானம், போயிங் 747 விமானம் போன்றவை தற்காலத்தில் பெருகிவிட்டதால் சுற்றுலாவும் பெருகிக் கொண்டே வருகிறது. சுற்றுலாவிற்குத் தொழில்தகுதி வழங்கப்பட்டுள்ளதால் இது விரைந்து முன்னேறுகிறது.

### இரண்டாம் உலகப் போருக்குப்பின் முன்னேற்றம்

சுற்றுலா இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தபின் மக்கள் மத்தியில் பெரிதும் செல்வாக்குப் பெற்றது. 1945க்குப் பின் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணமும் அதிகரித்தது. 1955-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டு வரையிலான பத்தாண்டுகளில் சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கை 51 மில்லியனிலிருந்து 157 மில்லியனாக உயர்ந்தது. பத்து ஆண்டுகளில் இது மூன்று மடங்கு உயர்ந்துள்ளது என்பது இங்கே கவனிக்கத்தக்கது.

மேற்குறிப்பிட்ட பயணியருள் 30 சதவிகிதத்தினர் அமெரிக்கா, ஜெர்மனி முதலான நாடுகளுக்கே சென்றுள்ளனர். காரணம் கல்வி, போக்குவரத்து, தங்கும் விடுதி வசதிகள் ஆகியன அங்கு வளர்ச்சி பெற்றுள்ளன.

அண்மைக் காலத்தில் சுற்றுலாப் பயணியரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. 1979 ஆம் ஆண்டில் 270 மில்லியன் சுற்றுலாப் பயணியர் அயல்நாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் 75000 மில்லியன் (அமெரிக்க) டாலர் வருவாய் கிட்டியுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே சுற்றுலாத்துறை முன்னேறிய போதிலும் 1976-க்குப் பின்னர்தான் இத்துறை வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது.

**வருவாய்ப் பெருக்கம்**

பன்னாட்டுச் சுற்றுலாவின் மூலம் உலகின் பல நாடுகள் தமது வருவாயைப் பெருக்கிக் கொண்டுள்ளன. சில நாடுகளின் சுற்றுலா வருவாய் அவற்றின் தேசிய வருவாயில் முக்கிய பகுதியாக அமைந்துள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் பார்படோஸ் முன்னணியில் நிற்கிறது. அது சுற்றுலாவின் மூலம் பெறும் வருவாய்; தனது தேசிய வருவாயில் கால் பகுதியாக இருக்கிறது என்பது பாராட்டத்தக்கது. ஆஸ்திரேலியா, ஸ்பெயின், அயர்லாந்து, ஜமைக்கா, மெக்ஸிகோ முதலான நாடுகள் தமது தேசிய வருமானத்தில் 50 சதவீதத்துக்கு மேல் சுற்றுலாவின் மூலம் பெறுகின்றன.

ஸ்பெயின் போன்று உலகின் பல நாடுகள் சுற்றுலாவை ஒரு முக்கியத் தொழிலாகவே கருதி, அதற்கெனத் திட்டங்கள் தீட்டி, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்துப் பெரும் பொருள் ஈட்டுகின்றன. இவ்வகையில் ஸ்பெயின், பனாமா, ஜோர்டான், மெக்ஸிகோ, ஜமைக்கா, கனடா முதலான நாடுகள் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் கண்டுள்ளன. 1978ஆம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டின் மக்கள் தொகை 40 மில்லியன். அந்நாட்டிற்கு வருகை தந்த அயல்நாட்டுப் பயணியரின் எண்ணிக்கையும் 40 மில்லியன். இதன் மூலம் ஸ்பெயின் எவ்வாறு அயல்நாட்டுப் பயணியரைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிக் கன்னியாக விளங்கியது என்பதனை அறியலாம். கனடாவும் சுற்றுலாத்துறையில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. செய்தித்தாள் உற்பத்திக்கு அடுத்த நிலையில் அங்கே சுற்றுலாத் தொழில் வளர்ந்துள்ளது.

**தாய்லாந்தில் :** கீழ்த்திசை நாடுகளும் இன்று சுற்றுலாத் தொழிலை நன்கு அபிவிருத்தி செய்துள்ளன. ஜப்பான், தாய்லாந்து, மலேஷியா முதலான ஆசிய நாடுகள் இத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளன. தாய்லாந்திலுள்ள பட்டயா (Pattayo) எனும் கடற்கரை நகரம், இன்று சொகுசு விடுதிகள் நிறைந்த நகரமாக மாறியுள்ளது. இது பாங்காக்கிலிருந்து 150 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

**பாரதத்தில் :** அண்மைக் காலத்தில் நம் பாரதமும் சுற்றுலாவை முன்னேற்றுவதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. 1951-இல் மட்டும் நம் நாட்டிற்கு 17000 சுற்றுலாப் பயணியர் வருகை புரிந்தனர். 1960 முதல் இதன் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வருவதையும் காணலாம், 1961-இல் நம நாட்டிற்கு 139804 வெளி நாட்டுப பயணியர் வருகை புரிந்தனர். 1969-ஆம் ஆண்டைக் காட்டிலும் இது 13.6% அதிகமாகும். 1971-ஆம ஆண்டில் இதன் எண்ணிக்கை 300995 ஆகவும், 1980-இல் 800150 ஆகவும், 1981-இல 853148 ஆகவும் உயர்ந்தது. 1980-இல் மட்டும் அயல் நாட்டுப் பயணியர் நம் நாட்டில் ரூ.550 கோடி முதல் 600 கோடி வரை அந்நியச் செலாவணித் தொகையாகச் செலவிட்டனர். இதனால் நம் நாட்டின் பொருளாதாரம் உயர்ந்தது. 1982-இல் அயல் நாட்டுப் பயணியரின் எண்ணிக்கை 860163 ஆக உயர்ந்தது. இது 1981-ஐக் காட்டிலும் 12.48 சதவீதம் முன்னேற்றத்தைக் காட்டியது. 1960 தொடங்கி 1981 வரையிலான ஆண்டுகளின் சுற்றுலா முன்னேற்றத்தைக் கணக்கிடுகையில், இந்தியாவிற்கு வருகை தநத பயணியரின் எண்ணிக்கை ஏழு மடங்காகப் பெருகியுள்ளமை புலனாகும்.

1988-ஆம் ஆண்டில் 1.2 மில்லியன் அயல்நாட்டுப் பயணியரும், 1989-இல் 1.3 மில்லியன் பயணியரும், 1990-ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை 9,40,000 பயணியரும் 1991-இல் 12,36,120 பயணியரும் நம் பாரதத்திற்கு வருகை புரிந்தனர். 1992-இல் 14,34,737 பயணியரும் 1994-இல் 18,86,433 பயணியரும் 1995 இல் 21,23,683 பயணியரும் 1996-இல் 22,87,860 பயணியரும் 1997-இல் 23,74,094 பயணியரும் 1998-இல் 23,58,629 பயணியரும் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். 1999 மற்றும் 2000 ஆண்டுகளில் முறையே ஏறத்தாழ 24,81,928 பயணியரும் 26,41,151 பயணியரும் வருகை புரிந்தனர். சுற்றுலாத் தொழிலில் ஒரு டாலர் முதலீடு செய்தால் நூற்றுக்கணக்கான டாலர்கள் வருவாய் கிடைக்கிறது. சுற்றுலாவிற்காக ஒரு டாலர் செலவிட்டு சிங்கப்பூர் 141 டாலர்களையும், நெதர்லாந்து 122 டாலர்களையும், இஸ்ரேல் 77 டாலர்களையும் வருவாயாகப் பெற்றன(1997).

## சுற்றுலாவின் மூலம் இந்திய வருவாய்

நம் பாரதமும் சுற்றுலா மூலம் கணிசமான அந்நியச் செலாவணியைப் பெறுகிறது. உலகில் அதிகமான அந்நியச் செலாவணியைப் பெறும் நாடுகளில் நம் நாடு, நான்காவது இடத்தைப் பெறுகிறது. இதன் விளைவாக நேரடியாகவும் மறைமுகமாகவும் நம் நாட்டின் வருவாய் பெருகுகிறது.

சுற்றுலாவின் மூலம் நமது நாடு 1698 முதல் 1972 வரையிலான ஐந்து ஆண்டுகளில் 214.5 கோடி ரூபாய் தேசிய வருவாயாகவும் 32.18 கோடி வரி வருவாயாகவும் பெற்றுள்ளது. 1999-இல் மட்டும் நம் பாரதம் 13041 கோடி ரூபாயைச் சுற்றுலா மூலம் பெற்றுள்ளது. இவ்வாறு நம் நாடும் அண்மைக் காலத்தில் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்தி அந்நியச் செலாவணியை ஈட்டி வருகிறது.

## சுற்றுலா வருவாயின் தனித்தன்மை

உலகின் பல பாகங்களிலும் சுற்றுலா வளர்ச்சி இன்று பன்மடங்கு பெருகியுள்ளன. விவசாய, தொழில் உற்பத்தியைக் காட்டிலும் சுற்றுலா வளர்ச்சியே நம்மை அதிர்ச்சியடையச் செய்கின்றது. 1961 முதல் 1972 வரையிலான இக்காலக் கட்டத்தில் விவசாயப் பொருள்களின் உற்பத்தி 32% ஆக உயர்ந்தது. தொழில்துறைப் பொருள்களின் உற்பத்தி 10% ஆக உயர்ந்தது. ஆனால் சுற்றுலாவோ 221% வளர்ச்சியை எட்டிப் பிடித்து அசுர சாதனை புரிந்துள்ளது. வர இருக்கும் ஆண்டுகளில் இது மேலும் உயரத்தான் செய்யும். இதனால் ஒரு நாடு வணிகப் பொருள் ஏற்றுமதி மூலம் பெறுகின்ற வருவாயைக் காட்டிலும், சுற்றுலாத்துறை மேம்பாட்டின் மூலம் கணிசமான வருவாயைப் பெறுகிறது என்ற பேருண்மை புலனாகும். எடுத்துக்காட்டாக நம் நாட்டை எடுத்துக் கொள்வோம். 1963-ஆம் ஆண்டில் 12,195 மில்லியன் ரூபாயை ஏற்றுமதிப் பொருள்கள் மூலம் பெற்ற நாம் 1972-ஆம் ஆண்டில் 18,030 மில்லியன் ரூபாயைப் பெற்றோம். இது ஒரு சாதாரண வளர்ச்சியே. இதன் வளர்ச்சி 4.5% தான். அதே காலக்கட்டத்தில் நம் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியைக் கணக்கிட்டுப் பார்த்தால், அது 6.8% வளர்ச்சியைக் காட்டுகிறது. இது மாபெரும் சாதனையே. சுற்றுலாவின் வருவாய் 206 மில்லியன் ரூபாயிலிருந்து 379 மில்லியன் ரூபாயாக உயர்ந்துள்ளமை (1963-1972) பாராட்டத்தக்கது. 1988-ஆம் ஆண்டில் நம் பாரதம் 2103 கோடி ரூபாயும் 1989-இல் 2456 கோடி ரூபாயும் 1991-இல் 3318 கோடி ரூபாயும் 1992-இல் 3989 கோடி ரூபாயும் 1998-இல் 11950 கோடி ரூபாயும் 1999-இல் 13041 கோடி ரூபாயும் அந்நியச் செலாவணியாகப்

சுற்றுலாவின் மூலம் பெற்றுள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. நாளடைவில் இது மேலும் பெருகும்.

அண்மைக் காலத்தில் பெரும்பாலான நாடுகள், சுற்றுலா வளர்ச்சியின் மூலம் அதிக அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டுகின்றன. இவ்வருவாய் நமது ஏற்றுமதிப் பொருள்களின் மொத்த வருமானத்தில் குறிப்பிடத்தக்கதோர் பங்கினை வகிக்கிறது.

## அந்நியச் செலாவணி பெறுதல்

அந்நியச் செலாவணியை ஈட்டும் தொழில்களுள் சுற்றுலாத் தொழில் முதலிடம் வகிக்கிறது. இன்று பல நாடுகள் தங்களது ஏற்றுமதிப் பண்டங்கள் மூலம் பெறும் அந்நியச் செலாவணியைக் காட்டிலும், சுற்றுலா வளர்ச்சியின் மூலம் அதிக அளவில் அந்நியச் செலாவணியைப் பெறுகின்றன. சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, ஸ்பெயின், கனடா, இத்தாலி, மெக்சிகோ, போர்ச்சுகல், அயர்லாந்து, தென் அமெரிக்க நாடுகள் முதலானவை சுற்றுலா வளர்ச்சியில் பெரிதும் கவனம் செலுத்தி, நிறைந்த வருவாயைப் பெறுகின்றன; இங்கிலாந்து, அமெரிக்காவிற்குப் பெருமளவில் பொருள்களை ஏற்றுமதி செய்தாலும், சுற்றுலா மூலமே மிகுதியான டாலர்களைச் சம்பாதிக்கிறது. நமது பாரதமும் சுற்றுலாப் பயணிகளின் மூலம் ஏறத்தாழ 600 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது. இது நம் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 8% ஆகும். இருப்பினும் உலகச் சுற்றுலா வணிகத்தில் இந்தியாவின் பங்கு 0.4 சதவீதமாக உள்ளது.

1996 இல் சீனா 12.1 பில்லியன் டாலர்களையும், ஹாங்காங் 10.8 பில்லியன் டாலர்களையும், தாய்லாந்து 8.7 பில்லியன் டாலர்களையும், சிங்கப்பூர் 7.9 பி.டாலர்களையும் சுற்றுலாத் தொழிலின் மூலம் அந்நியச் செலாவணியாகப் பெற்றது.

## வளர்ந்துவரும் நாடுகளுக்குச் சுற்றுலா கைகொடுக்கிறது

வளர்ந்து வரும் நாடுகள் பல, தொழில் முன்னேற்றத்திற்காகப் பல நவீன யந்திரங்களை இறக்குமதி செய்கின்றன; ஆனால் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியோ பெருகுவதில்லை; இதன் விளைவாக அவை பாதகமான வாணிகச் சமநிலையை (Adverse Balance of Trade) அனுபவிக்க வேண்டியுள்ளது. அடுத்து, செலுத்தும் சமநிலையும் (Balance of payment) பாதகமாகவே அமைந்து விடுகிறது. தாங்கள் கூடுதலாக இறக்குமதி செய்யும் பொருள்களின் விலையைத் தங்கமாகவோ, வெளிநாட்டு நாணயமாகவோ, செலுத்தி, செலுத்தும் சமநிலையை ஈடுசெய்ய

ஏற்பாடு செய் என்பதை உணர வேண்டும். பயணிகளுக்கும் பயணத்தை செயல்படவேண்டு கொடுப்பவர்களுக்கும் இடையே ஓர் பாலமாகச் செயல்படவேண்டு நிறைவேற்று பயணிகளின் விருப்பங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்று வண்ணமாக சுற்றுலா வழிகாட்டிகள் செயல்படவேண்டும். பண்பாட்டு பரிமாற்றங்களில் தான் முக்கியப்பங்கு வகிக்கும் பொறுப்பை உணர்ந்து செயல்படவேண்டும்.

# 10. பயண ஆவணங்கள்

## (TRAVEL DOCUMENTS)

பண்டைய காலங்களில் மனிதர்கள் நாடு விட்டு நாடு எந்தவிதக் கட்டுப் பாடும் இல்லாமல் பயணம் செய்து வந்தார்கள். அப்படிச் செல்வது எல்லா நாடுக ளாலும் அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது. வரலாற்றில் புகழ்பெற்ற பயணிகளான யுவான் சுவாங், பாஹியான், மார்க்கோபோலோ, வாஸ்கோடகாமா, மெகலன் போன்றவர்கள் தாங்கள் சுதந்திரமாக உலக நாடுகளில் பயணம் சென்று வந்ததைக் குறிப்பிட்டுள்ளார்கள். காலம் செல்லச் செல்ல நாடுவிட்டு நாடு செல்வது அதிகமானது. பிற நாடுகளையும், இடங்களையும் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது.

இங்கிலாந்து நாட்டில் மக்களுக்கு உரிமை வழங்கிய சாசனமான மாக்னகார்ட்டாவை கி.பி.1215-ல் மன்னர் ஜான் வெளியிட்டார். அந்த மாக்னகார்ட்டாவின் 42-வது பிரிவு இங்கிலாந்துக் குடிமகன் ஒவ்வொரு வருக்கும் நாட்டை விட்டு வெளியே செல்லவும், திரும்பி வரவும் உரிமை யளித்தது. நவீன காலத்தின் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய நாடுகளும் கடல் வழிகளும் மனிதர்கள் நாடு விட்டு நாடு பயணம் செல்வதை அதிகரித்தது. முக்கியமாக வாணிக நோக்குடன் மேலைநாட்டு மக்கள் கீழை நாடுகளுக்கும், கீழை நாட்டு மக்கள் மேலை நாடுகளுக்கும் எவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் சென்றனர். 1791-ம் ஆண்டு பிரான்ஸ் நாடு தனது குடிமக்களுக்குப் பயண சுதந்திரம் அளித்தது. 1868-ம் ஆண்டு அமெரிக்காவும் தனது குடிமக்களுக்கு பிற நாடுகளுக்கு உல்லாசப் பயணம் செல்ல உரிமை அளித்தது.

ஆனால் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒவ்வொருநாடும் மக்களின் இனம், மொழி, மதம், அரசியல் ஆகிய காரணங்களைக்காட்டி பிற நாட்டைச் சேர்ந்தவர்கள் தங்கள் நாட்டிற்குள் நுழையத் தடைவிதிக்க ஆரம்பித்தன. பல கட்டுப்பாடுகளை விதித்தன. எனவே பயணம் செய்வதில்

கடினமான நிலை ஏற்பட்டது. இதற்குத் தீர்வு காண்பதற்காக 1920-ல் சர்வதேச சங்கம் இதுபற்றி விசாரித்தது. நாடுகளுக்கிடையே பயணம் செய்வதில் ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றி விவாதித்தது. அதன் விளைவாக நாட்டைவிட்டு செல்பவர்களுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் வேண்டாம் என்று வெளிநாட்டிலிருந்து நாட்டிற்குள் வரும் பயணிகளுக்கு மட்டும் நுழைவு அனுமதி அளிப்பது என்று நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப்பிறகு சற்றுலா அம்சத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. எனவே பல நாடுகள் வெளிநாட்டுப் பயணிகளை மேற்பார்வையிடவும் அவர்களது வருகைக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கவும், கண்காணிப்பாளர்களை நியமிக்கவும் ஆரம்பித்தன. ஐக்கிய நாடுகள் சபை 1948 டிசம்பர் 10-ம் தேதி வெளியிட்ட மனித உரிமைகள் குறித்த பிரகடனத்தின் 13-ம் பிரிவு பன்னாட்டுப் பயணங்களைப் பற்றிய முக்கிய முடிவு எடுத்தது. இந்த ஷரத்தின்படி உள்நாட்டில் தடையின்றி எந்த பகுதிகட்கும் செல்லவும், தான் வாழும் நாட்டை விட்டு வெளியே சென்று திரும்பி வரவும் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையளித்தது. அதன் பிறகு 1963-ல் கூடிய ஐக்கிய நாடுகள் சபையானது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதற்கு இருக்கும் தடைகளை நீக்குவது பற்றி விவாதித்தது. இந்த விவாதத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் பயண விதிமுறைகளை எளிமைப்படுத்தின. கீழ்க்கண்ட பயண ஆவணங்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதற்கு மிகவும் அவசியம் தேவைப்படுகிறது.

## 1. பாஸ்போர்ட் அல்லது பயண இசைவு சீட்டு (Pass port):

ஆரம்ப காலத்தில் ஒரு கப்பல் ஒரு துறைமுகத்தை விட்டு வெளியேறிச் செல்வதற்காக வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டே பாஸ்போர்ட் என்று அழைக்கப்பட்டது. இச்சொல்லே பிற்காலத்தில் அயல்நாடுகளுக்குச் செல்லும்போது பயணிகளுக்கு வழங்கப்படும் அனுமதி சீட்டிற்கும் வழங்கப்பட்டது.

பாஸ்போர்ட் என்பது ஒரு அரசாங்கம் பயணம் செய்பவரை அவர் எந்த நாட்டு பிரஜை என்பதைச் சுட்டிக்காட்டும் ஆவணம் ஆகும். இந்த பாஸ்போர்ட் ஒருவர் தன் நாட்டிலிருந்து வெளியேறவும் திரும்பவும் நாட்டிற்கு வரவும் உரிமை அளிக்கிறது.

## பாஸ்போர்ட் எடுக்கும் முறை:

தமிழகத்தில் சென்னை மற்றும் திருச்சியில் மட்டுமே பாஸ்போர்ட் அலுவலகங்கள் உள்ளன. அங்கே பாஸ்போர்ட் விண்ணப்பப் படிவம் கிடைக்கும். தற்போது சென்னை, சேலம், ஈரோடு, கோவை, திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் இந்த விண்ணப்பப் படிவங்களை விற்க சில ஏஜென்ஸிகள்

நியமிக்கப்பட்டுள்ளன. தற்போது மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. நிரப்பப்பட்ட விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளிலும் இருக்கும். விண்ணப்பதாரரின் பெயர், அப்பா, அம்மா ஆகியோர் பெயரில் தொடங்கி... கல்வித் தகுதி, பணி செய்யும் இடம் என விண்ணப்பத்தின் முதல் நான்கு பக்கங்களில் நம்மைப் பற்றிய முழு 'ஸ்கேன்' ரிப்போர்ட்டையும் கொடுக்க வேண்டியிருக்கும்.

விண்ணப்பப் படிவத்தோடு நாம் இணைத்துத் தரவேண்டியது இருப்பிட சான்றும் பிறப்பு சான்றும். ரேஷன்கார்டு இருந்து விட்டால் இருப்பிட சான்றுக்கு தொல்லையே இல்லை. அது இல்லாத போது, டெலிபோன் பில், குடிநீர் கட்டண ரசீது, மின்கட்டண ரசீது, பாங்க் அக்கௌண்ட் நம்பர், தேர்தல் கமிஷன் தற்போது வழங்கி வரும் அடையாள அட்டை போன்றவற்றை இருப்பிட சான்றுக்கான ஆதாரமாக சமர்ப்பிக்கலாம். உடல்நலத்தகுதிகள் பற்றிய விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். உயரம், உடலின் நிறம், கண்ணின் நிறம் போன்றவற்றையும் சொல்ல வேண்டும். விண்ணப்பிக்கும் நாம் மத்திய, மாநில அரசு பணியாளராகவோ, பொதுத்துறை நிறுவன ஊழியராகவோ இருந்தால் 'No Objection' சர்டிபிகேட் தர வேண்டும். இதற்கென விண்ணப்பப் படிவத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் 'E' Form -ஐ நிரப்பி சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தோடு இணைக்கப்படும் அனைத்து சான்றுகளிலும் இரண்டிரண்டு சமர்ப்பிக்க வேண்டும்.

இப்போதைய நிலையில் விண்ணப்பிக்கப்பட்ட முப்பத்தைந்து நாட்களுக்குள் பாஸ்போர்ட் தரப்பட்டு விடுகிறது. விசாரணை நடத்துவதில் ஏற்படும் காலதாமதம் காரணமாக சில நேரங்களில் தாமதம் ஏற்படுகிறது. இப்போது 'தாட்கால் ஸ்கீம்' என்ற புதுமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கட்டணம் செலுத்தினால் ஏழு நாட்களுக்குள்ளும், ஆயிரம் ரூபாய் கட்டணம் செலுத்தினால் குறிப்பிடப்பட்ட 35 நாட்களுக்கு முன்னதாகவும் பாஸ்போர்ட்டை வாங்கிவிடலாம்.

1998 அக்டோபர் 11 முதல் வெளிநாடு செல்ல குழந்தைகளுக்கும் கட்டாயமாக பாஸ்போர்ட் வாங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பா, அம்மா இருவருக்கும் பாஸ்போர்ட் இருந்து, சேர்ந்து விண்ணப்பிக்கும் போது பிரச்சனை இல்லை. ஆனால், குழந்தைகளுக்கு மட்டும் வாங்கும் போது இந்தக் குழந்தையின் அப்பா, அம்மா இருவரும் தங்கள் அனுமதியைத் தரவேண்டும். இவர்கள் அனுமதி இல்லாமல் பாஸ்போர்ட் தரப்படமாட்டாது. குழந்தையின் அப்பா வெளிநாட்டில் இருந்தால், அதற்கான அத்தாட்சி கடிதம் வாங்கித் தந்தாக வேண்டும்.

இப்படி வாங்கிய பாஸ்போர்ட்டில் பயணியைப் பற்றிய கீழ்கண்ட குறிப்புகள் இடம் பெறுகின்றன.—

a) பயணியின் முழுப்பெயர், b) நிலையான முகவரி, c) பயணியின் வயதும், பிறந்த தேதியும், d) பிறந்த ஊர், e) உடம்பிலுள்ள அழிக்கமுடியாத இரண்டு அடையாளங்கள், f) கல்வித் தகுதி, g) பயணியின் மார்பளவு போட்டோ, h) பாஸ்போர்ட் செல்லுபடியாகும் காலம், i) பாஸ்போர்ட் வழங்கிய இடம், தேதி மற்றும் பாஸ்போர்ட் வழங்கிய அதிகாரியின் கையொப்பம்.

மேற்கண்ட குறிப்புகள் இடம்பெறும் இந்த பாஸ்போர்ட் வைத்திருப்பதாலேயே ஒருவர் தன்னிச்சையாக வெளிநாட்டுக்குச் சென்று திரும்பி வர முடியாது. அரசாங்கத்தின் emigration clearance என்ற தடை நீக்க சான்றிதழ் பாஸ்போர்ட்டில் முத்திரையிடப்பட வேண்டும். அதன் பின்னரே வெளிநாட்டிற்குச் செல்ல முடியும். மேலும் பாஸ்போர்ட் வைத்திருப்பவர் அவ்வப்போது அரசாங்கம் வெளியிடும் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

## பாஸ்போர்ட் வகைகள்

(கட்டண விவரம் ரூபாயில்)

| | |
|---|---|
| 10 ஆண்டுகளுக்குக்கான புதிய பாஸ்போர்ட் (36 பக்கங்கள்) | 1,000 |
| 16 ஆண்டுகளுக்குக்கான புதிய பாஸ்போர்ட் (60 பக்கங்கள்) | 1,500 |
| 5 ஆண்டுகளுக்கான சிறுவர்களுக்கான (15வயது கீழுள்ளோர்) புதிய பாஸ்போர்ட் | 600 |
| சேதமடைந்த, தொலைந்த பாஸ்போர்ட் புதுப்பிக்க (36 பக்கங்கள்) | 2,500 |
| சேதமடைந்த, தொலைந்த பாஸ்போர்ட் புதுப்பிக்க (60 பக்கங்கள்) | 3,000 |
| இந்தியா - வங்கதேசம் ; இந்தியா - இலங்கை பாஸ்போர் (10 ஆண்டுகள்) | 500 |
| கூடுதலாக 60 பக்கங்களுடைய புத்தகம் | 700 |
| முகவரி மாற்றம் : காவல்துறையின் சான்றிதழ் : | |
| குழந்தைகள் விவரங்கள் நீக்கம்: | |
| குடிபெயர்வு சான்று : கூடுதல் சேர்க்கை (ஒவ்வொரு சேவைக்கும் தனி) | 300 |
| இந்திய - வங்கதேசம்: இந்தியா - இலங்கை பாஸ்போர்ட்டுகளுக்கான இதர சேவைகள் | 100 |

**தக்கல் திட்டத்தின் கீழ் பாஸ்போர்ட் பெறுவதற்கான கூடுதல் கட்டணங்கள்**

| | |
|---|---|
| 10 நாள்களுக்குள் புதிய பாஸ்போர்ட்டுகள் பெற | 1,500 |
| 11முதல் 35 நாள்களுக்கு புதிய பாஸ்போர்ட் பெற | 1,000 |
| 10 நாள்களுக்குள் டூப்ளிகேட் பாஸ்போர்ட் பெற | 2,500 |
| 11-35 நாள்களுக்குள் டூப்ளிகேட் பாஸ்போர்ட் பெற | 1,500 |
| முதிர்வடைந்த பிறகு 10 நாள்களுக்குள் மறு பாஸ்போர்ட் பெற | 1,500 |
| முதிர்வடைந்த பிறகு 11-35 நாள்களுக்குள் மறு பாஸ்போர்ட் பெற | 1,000 |

| | |
|---|---|
| கூடுதல் பக்கங்களை 10 நாட்களுக்குள் பெற | 1,500 |
| கூடுதல் பக்கங்களை 11-35 நாட்களுக்குள் பெற | 1,000 |

## 2) விசா (VISA): (வெளிநாட்டு நுழைவு அனுமதி சான்று)

'விசா' என்பது ஒரு அரசாங்கத்தினால் வெளிநாட்டுப் பயணி ஒருவருக்கு குறிப்பிட்ட காலம் வரையிலும், குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் தங்குவதற்கு அனுமதியளிக்கும் ஆவணம் ஆகும். விசா ஒரு சிலநேரம் பாஸ்போர்ட்டிலேயே உத்தரவு ஆவணமாக (endorsement) எழுதப்படலாம் அல்லது தனி ஆவணமாகவும் வழங்கப்படலாம். இந்த விசா முறையானது தன்னுடைய நாட்டிற்குள் பயணம் செய்யும் வெளிநாட்டவரைப் பற்றிய தகவல்களையும், அந்தப் பயணிகளால் நாட்டிற்கு எந்தவிதமான பாதகமான சூழ்நிலை ஏற்படாவண்ணம் பாதுகாக்கவும் உதவுகிறது. இத்தகைய விசா வெளிநாட்டுப் பயணிகளுக்கு ஒரு அரசு வழங்கிய போதிலும் அந்த விசாவை எந்தக் காரணமும் கூறாமல் ரத்து செய்து பயணியைத் திருப்பி அனுப்பும் அதிகாரம் அரசாங்கத்திற்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. விசாக்கள் கீழ்க்கண்ட நான்கு வகைப்படும் அவை.

### a) நுழைவு விசா : (Entry VISA)

மேற்படிப்பு, வாணிபம், வேலையில் சேருதல் போன்ற ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக தன்து நாட்டினுள் நுழைய அனுமதிப்பதே 'நுழைவு விசா' எனப்படும். இந்த விசா ஓய்வு நேரத்தைக் கழிப்பதற்காகவும் வழங்கப்படலாம்.

இந்த நுழைவு விசாவில் சம்பந்தப்பட்ட பயணி தங்கப்போகும் காலம், செல்லும் இடங்கள் ஆகியவை குறிக்கப்பட்டிருக்கும். பொதுவாக இந்த விசா ஆரம்பத்தில் 15 நாட்கள் முதல்மூன்று மாதங்களுக்கே வழங்கப்படும். பின்னர் பயணிகளின் விருப்பத்திற்கேற்ப மேலும் நீடிக்கப்படலாம்.

### b) கடந்து செல்லும் விசா : (Transit VISA)

'கடந்து செல்லும் விசா' என்பது ஒரு பயணி தன்னுடையப் பயணக் காலங்களில் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் செல்லும் பொழுது இடையில் வேறொரு நாட்டில் தற்காலிகமாகத் தங்கிக் கொள்ள வழங்கும் அனுமதிச்சீட்டே டிரான்சிட் விசா என்பதாகும். உதாரணமாக ஆஸ்திரேலியாவி லிருந்து ஸ்வீடன் நாட்டிற்குச் செல்லும் ஒரு பயணி சோவியத் நாட்டிலுள்ள மாஸ்கோவில் தங்க நேர்ந்ததால் ஆஸ்திரேலியாவிலுள்ள சோவியத் தூதரகத்தில் தனது பயணச் சீட்டைக் காண்பித்து கடந்து செல்லும் விசாவைப் பெற்றுக் கொள்ளலாம்.

## c) சுற்றுலா விசா : (Tourist VISA)

'சுற்றுலா விசா' என்பது ஒரு நாட்டிற்கு சுற்றுலா நோக்கத்தோடு மட்டும் செல்ல விரும்பும் பயணிகளுக்கு வழங்கப்படும் அனுமதிச் சீட்டே சுற்றுலா விசா எனப்படும். இந்த விசா சுமார் இரண்டு மாதங்கள் வரை வழங்கப்படுகிறது. குழுச் சுற்றுலாவிற்கும் விசா வழங்கப்படுகிறது. இதனால் சுற்றுலா ஊக்குவிக்கப் படுகிறது. மலேஷியா குறைந்தபட்சம் ஒரு மாதமும், சிங்கப்பூர் 14 நாட்களுக்கும் சுற்றுலா விசா வழங்குகின்றன.

## d) குடியேற்ற விசா : (Immigrant VISA)

பயணி ஒருவர் அயல்நாட்டில் தற்காலிகமாகக் குடியேற வழங்கப்படும் அனுமதியே குடியேற்ற விசாவாகும். இந்த விசாவும் பாஸ்போர்ட்டில் மேற்குறிப்பாகவே (endorsement) குறிக்கப்படும்.

உள்நாட்டில் சுற்றுலா மேற்கொள்ளும் பயணி ஒருவர் எந்தவிதமான தடையும் இன்றி பயணம் செல்லலாம். ஆனால் அதே பயணி வெளிநாடு ஒன்றுக்கு சுற்றுலா மேற்கொண்டால் தனது தாய்நாட்டிடம் பாஸ்போர்ட்டும் தான் செல்லும் நாட்டு அரசாங்கத்திடம் விசாவும் வாங்கவேண்டும். பொதுவாக இந்த இரண்டுமே சுற்றுலாப் பயணிகளுக்குப் பெருந்தடைகளாக உள்ளன. ஆனாலும் கால தாமதம் இல்லாமல் ஓரளவு பாஸ்போர்ட்டும், விசாவும் கிடைக்கின்றன. இந்தியாவில் பாஸ்போர்ட் விண்ணப்பித்த நாற்பது நாட்களுக்குள் வழங்கப் படுகிறது. ஒரு நாட்டிற்கு ஒரு மாதத்திற்கு விசா எடுத்து சுற்றுலா சென்றுவிட்டு அதற்கு மேற்பட்ட நாட்களுக்கு அந்த நாட்டில் தங்கிவிட்டால் சட்டப்படி கைது செய்யப்பட்டு சிறையிலடைக்க வழி உள்ளது. இந்த விசா வழங்கும் முறையானது பிறநாடுகளிலிருந்து வரும் தொழிலாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்க உதவுகிறது.

## e) வணிகவிசா : (Business VISA)

வணிக வெளிநாட்டு நுழைவு சான்று (விசா) பெற அழைப்பிதழ் கடிதம் (Letter of Invitation) ஒரு முக்கியமான ஆவணமாகும். அந்த அழைப்பிதழுக்குரிய குறிப்புகள் பின்வருமாறு :

1. இது அழைப்புக் கொடுக்கும் நிறுவனத்தின் தலைப்புக் கடிதத்தில் (Letter Head) இருக்க வேண்டும்.

2. அழைப்பிதழில் மனுதாரரின் பெயர், பாஸ்போர்ட், பயணத்தின் நோக்கம், காலஅளவு ஆகியவை பற்றி தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.

3. அழைப்புக் கொடுப்பவரின் பெயர், பொறுப்பு, கையெழுத்து ஆகியவை தெளிவாக நிறுவனத்தின் முத்திரையுடன் இருக்க வேண்டும்.

4. இந்த அழைப்பிதழின் நகல் சம்மந்தப்பட்ட தூதரகத்திற்கு விண்ணப்பதாரரால் அனுப்பப்பட வேண்டும். அதே சமயம் அழைக்கும் நிறுவனமும் இக்கடிதத்தை பேக்ஸ் மூலம் தூதரகத்திற்கு அனுப்ப வேண்டும்.

சில நெருக்கமான நட்பு நாடுகள் தமக்குள் எவ்வித தடையுமின்றி அண்டை நாட்டுச்சுற்றுலாப் பயணிகளை தங்கள் நாட்டினுள் அனுமதிக்கின்றன. இதன் விளைவாக சுற்றுலா மேன்மையடைவதுடன் அந்த இரண்டு நாடுகளின் நட்புறவு மேலும் வலுவடைகிறது. உதாரணமாக இந்தியா, நேபாளம், பூடான் ஆகிய நாடுகளுடன் நெருங்கிய நட்புறவு கொண்டுள்ளது. எனவே இந்திய சுற்றுலா பயணி ஒருவர் நேபாளம், பூடான் ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு பாஸ்போர்ட் மற்றும் விசா அவசியமில்லை. அதேபோல அமெரிக்கப் பயணி கனடாவுக்குள்ளும் பாஸ்போர்ட் விசா இன்றி பயணம் செல்லலாம்.

## விசா எடுப்பதற்கான பொதுவான வழிமுறை:

முதலாவதாக விசா விண்ணப்பிக்கும் நாளிலிருந்து ஆறுமாத காலம் பாஸ்போர்ட் செல்லத்தக்கதாக இருக்க வேண்டும். விசா விண்ணப்பம் தெளிவாக தட்டச்சினால் நிரப்பப்படவேண்டும். விண்ணப்பதாரர் ஆறுமாதங்களுக்குள் எடுக்கப்பட்ட போட்டோக்களையே பயன்படுத்த வேண்டும். விசா விண்ணப்பத்துடன் சென்று வர பயண உறுதியுடன் கூடிய (O.K) விமான டிக்கட் வைக்க வேண்டும். வெளிநாட்டு நாணயமாற்று (Foreign Exchange) பாஸ்போர்ட்டில் பதிவு செய்யப்படவேண்டும். உதாரணமாக 250 அமெரிக்க டாலர் எடுத்து பாஸ்போர்ட்டில் பதிவு செய்து கொள்ளலாம்.

இவை தவிர விசா விண்ணப்பத்துடன் இணைப்புக் கடிதம் (Covering Letter) வைக்க வேண்டும். அதில் பயணம் மேற்கொள்பவரின் பெயர் பொறுப்பு உட்பட அனைத்து அறிமுக விபரங்களும் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். சுற்றுலாப் பயணியின் பயணத்திற்கான சுற்றுலா, வணிகம், சமயப்பணி போன்ற காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். பயணத்திற்கான கால அளவும் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். வணிகம் குறித்த பயணம் என்றால் அது குறித்த சுருக்கமான விபரங்கள், உற்பத்தி பொருள், தொடர்புகள், நிதிநிலை விபரங்கள் போன்றவைகளைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். இந்த இணைப்புக் கடிதத்தில் கையெழுத்திடுபவரின் பெயரும் பொறுப்பும் குறிப்பிடுதல் அவசியம்.

விண்ணப்பதாரர் பணிபுரிபவராக இருந்தால பணி உத்தரவுக் கடிதம், சம்பளரசீது, நிறுவனத்தின் தலைப்புக் கடிதத்தில் 'பயணத்திற்கு மறுப்பில்லை'